மேலும், உறுப்பினர் அவர்கள் கோரும் கால்நடை கிளை நிலையத்திற்கும், மற்ற கால்நடை கிளை நிலையங்களுக்கும் இடையே உள்ள தொலைவையும் கணக்கிட்டு, எதிர்காலத்திலே நிதிநிலையை அனுசரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை முன்னுரிமை அடிப்படையிலே இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தனை கிராமங்களிலும் ஏறத்தாழ 5,000–லிருந்து 7,000 கால்நடைகள் இருக்கின்றன. இன்று பால் தேவையும் அதிகமாக இருப்பதால், நோய் தாக்காமல் இருப்பதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் கண்டிப்பாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் நீங்கள் உத்தரவு பெற்று அதை அமைத்துத் தர வேண்டும். அப்படி அமைத்துத் தந்தால், நாங்குநேரி மக்கள் மத்தியில் சட்டமன்றத்திலே வசந்தகுமார் எங்களுக்காகப் பேசினார் என்ற ஒரு புகழும் எனக்குக் கிடைக்கும் என்று நமது மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

86—

சுற்றுலாத் தலம்

***91279—திரு. ஓ. சுப்பிரமணியம்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 23]

பவானிசாகர் அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஓர் இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பவானிசாகர் அணைக்கட்டு பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் கருத்துரு தற்போது துறையின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உருவாகக்கூடிய ஆறுகளில் ஒன்று பவானி ஆறு. 1955 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியில் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அணை பவானிசாகர் அணை. கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட மக்களின் பொழுதுபோக்குத் தலமாக விளங்கக்கூடியது பவானிசாகர் அணைக்கட்டுப் பகுதி. பிரசித்தி பெற்ற பண்ணாரி அம்மன் திருக்கோயில் அருகில் உள்ளது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு சுமார் 8½ கோடி ரூபாய் செலவில் அணை பராமரிப்புச் செய்யப்பட்டு, மேலும் 50 இலட்சம் ரூபாய் செலவில் பூங்காவும் அழகுபடுத்தப்பட்டு, சிறந்த முறையிலே இருக்கின்ற அந்த அணைக்கட்டுப் பகுதிக்கு திருவிழாக் காலங்களிலும் மற்ற விசேஷமான நாட்களிலும் சுமார் 5,000 பேர் தினசரி வருகின்ற அளவிற்கு ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக பவானிசாகர் அணைக்கட்டுப் பகுதி விளங்குகிறது. எனவே, அந்த பவானிசாகர் அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கட்டு பகுதியைப் பொறுத்தமட்டில், சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், அதிகமான பயணிகள் வருகை தந்தால் அதற்காக அந்தப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்வது இந்தத் துறையினுடைய கடமை. அந்த அடிப்படையில் அதிகமான பயணிகள் வருகின்றபோது நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளை ஏற்று வருங்காலத்தில் நிதிநிலைமையையும் கருத்தில்கொண்டு, செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒ. சுப்பிரமணியம்.

திரு. ஒ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திப்பு சுல்தான் அவர்கள் மைசூரிலே இருந்து படையெடுத்து வந்த, அந்தப் பாதையிலே பவானிசாகர் அணைக்கட்டு பகுதி அமைந்திருக்கின்றது. திரைப்படம் எடுக்கப்படுகின்ற பிரசித்தி பெற்ற தெங்குமரஹடா பகுதியும், பிரசித்தி பெற்ற கோயில் அமைந்திருக்கக்கூடிய கருவன்ராயகுளத்தில் அமைந்திருக்கக்கூடிய கஜரெட்டி பகுதியும் அந்தப் பகுதியிலேதான் இருக்கின்றன. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்கூட ஈரோடு வந்திருந்தபோது, அந்த அணைக்கட்டு பகுதி சுற்றுலாத் தலமாக விளங்குவதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கித் தருவதாக ஒரு கூட்டத்திலே சொல்லியிருந்தார்கள். எனவே அந்த 10 கோடி ரூபாயை ஒதுக்கிக்கொடுத்து, அந்த அணைக்கட்டு பகுதியை அழகுபடுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடைப் பொறுத்தமட்டில் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை 2007 ஆம் ஆண்டு 6.98 இலட்சம், 2008 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டில் 9.87 இலட்சம்; 2009 ஆம்

2010 ஏப்ரல் 23]

ஆண்டைப் பொறுத்தமட்டில் 12.99 இலட்சம். எனவே, வருகிற காலகட்டத்தில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது அரசு நிச்சயமாக பவானிசாகர் அணைக்கட்டு பகுதியில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 5 கோடி ரூபாய் அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக கருத்துருக்கள் வாங்கப்பட்டு, சுற்றுலா இடங்களை மேம்படுத்த வேண்டுமென்று அந்த கருத்துருக்கள் எல்லாம் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக மைய அரசினுடைய நிதியைப் பெற்று வருங்காலத்தில் அது சீர்செய்து தரப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

87—

மாணவர் விடுதி

***104831—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலக்கோடு தொகுதி, இருமத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி துவக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தொகுதி, இருமத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய விடுதி துவங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், அவையில் இல்லை.